THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Saturday, the 1st March 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at eleven of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

MR. SPEAKER : நான் உங்கள் எல்லோரையும் இந்த சட்டசபை கூட்டத்திற்கு வரவேற்கிறேன்.

I.—OBITUARY REFERENCE TO THE DEATH OF MAULANA ABUL KALAM AZAD.

MR. SPEAKER : மத்திய அரசாங்கத்தின் கல்வியமைச்சராயிருந்த மௌலானா அபுல்கலாம் ஆஸாத் அவர்கள் பெப்ருவரி 22-ம் தேதியன்று மரணம் அடைந்த செய்தியை நான் வருத்தத்தோடு இந்த சபைக்கு தெரிவிக்கிறேன். அவர் தேசத் தொண்டர். தேச விடுதலைப் போராட்டத்தில் மஹாத்மா காந்தியோடு தோளோடு தோள் நின்று வேலை செய்தவர். உருதுவில் நல்ல பேரறிஞர். கல்வியமைச்சராய் நம் நாட்டிற்கு நல்ல டணி செய்தவர். நாம் அவரது மரணத்தால் அடைந்துள்ள பெரும் நஷ்டத்தை, நமது ஆழ்ந்த அனுதாபத்தை இச்சபையின் சார்பாக அன்னாரின் குடும்பத்தினருக்கு நான் தெரிவித்துககொள்ள விரும்புகிறேன். அன்னாருக்கு மரியாதை செலுத்தும் விதத்தில் எல்லோரும் இரண்டு நிமிஷம் மௌனமாய் நிற்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த சபை இப்பொழுது கலைந்து மறுபடியும் 11-30-க்கு கூடும்.

The House adjourned and re-assembled at 11-30 a.m., Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

II.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Local Development Scheme at Arumbakkam

* 153 Q.—SRI P. U. SHANMUGAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any school has been constructed under the Local Development Scheme at Arumbakkam, Tiruvannamalai taluk;

(*b*) if so, when it was constructed; and

(*c*) why it has not been recognised?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) , (*b*) & (*c*) The building was built under the National Extension Service scheme and not the Local Development Scheme. I do not have the exact date, etc., Sir.

SRI P. U. SHANMUGAM : இந்த பாடசாலைக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்கிறதா ? அளிக்கப்படவில்லையென்றால் எப்போது அளிக்கப் படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றி டைரக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷன்-னுக்கு அறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு பதில் வ்ந்த பின்னால் உத்தரவு போடப்படும்.

[1st March 1958

MR. SPEAKER : கனம் மந்திரி மாணிக்கவேலு அவர்களால் பதில் அளிக்கப்படவேண்டிய கேள்விகளை இன்று மந்திரி அவர்கள் வராததினால் பின்னால் எடுத்துக்கொள்ளலாம். The Hon. Sri Venkataraman will be coming. We will pass over Q. No. 155 now and take it up a little later.

New bus routes

* 156 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Electricity be pleased to state the number of applications received and the number sanctioned for the opening of new bus routes in the Coimbatore district during 1956–57 and 1957–58?

THE HON. SRI V. RAMIAH : The figures are as follows :—

1956–57.

Number of applications received	24
Number of routes sanctioned	4

1957–58 up to 15th January 1958.

Number of applications received	22
Number of routes sanctioned	7

SRI P. G. MANICKAM : சபாநாயகர் அவர்களே, சென்னை மாகாணத்தில் புது பஸ் மார்க்கங்கள் ஆரம்பிப்பதற்கு ஒதுக்கப்பட்ட எண்ணிக்கையில் கோயம்புத்தூர் ஜில்லாவுக்கு எத்தனை எண்ணிக்கை ஒதுக்கப்பட்டிருக்கிறது ? அதில் எத்தனை ரூட்டுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI V. RAMIAH : ஒவ்வொரு ஜில்லாவிற்கும் எத்தனை ரூட்டுகள் தேவை என்று பார்த்து அதற்கு தகுந்தாற் போல் முடிவு செய்து ரூட்டுகள் கொடுக்கப்பட்டுவருகிறது.

SRI K. VINAYAKAM : Sir, out of the lucky recipients of these Bus Routes, are they new entrants or are they lorry owners to begin with or are they fleet owners?

THE HON. SRI V. RAMIAH : How does this question relate to the main question, Sir? (Interruption). It is totally a wrong question.

MR. SPEAKER : The Hon. Minister may refuse to answer the question.

SRI P. G. MANICKAM : சபாநாயகர் அவர்களே, புது பஸ் மார்க்கங்கள் கொடுக்கப்படும் பொழுது முக்கியமாக கிராமப்பகுதிகளுக்கு கொடுக்கப்பட்டு வருகின்றனவா ? அப்படியானால் எத்தனை இடங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI V. RAMIAH : புது ரூட்டுகள் எந்தெந்த கிராமங்களுக்கெல்லாம் தொடர்பு இருக்கிறதோ அந்த இடங்களுக்கு அதிக வசதி செய்து கொடுக்கவேண்டும் என்றுள்ள நோக்கத்தை மனதில் வைத்துத் தான் கொடுக்கப்பட்டு வருகிறது.

SRI T. T. DANIEL : May I know, Sir, whether the Government have formulated any principles which they have to follow in opening new bus routes?

THE HON. SRI V. RAMIAH : The general principle is wherever there is demand, the demand is considered.